ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2259/33 - 2021 දෙසැම්බර් මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.12.23
*2259/33 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**5 ஆவது திருத்தம்**

கணக்காய்வு பரீட்சகர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக்குறிப்பு

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 1985, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிய மற்றும் 380/61 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வுப் பரீட்சகர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக்குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும். திருத்தியமைக்கப்பட்ட இவ் ஏற்பாடுகள் அமைச்சரவையினால் கொள்கைசார் தீர்மானம் எடுக்கப்பட்ட 2021, செத்தெம்பர் 13 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

*2021, திசெம்பர் 22.*

**பகுதி I**

*திருத்த இலக்கம் 01 - 2008 யூன் மாதம் 13 ஆம் திகதிய மற்றும் 1553/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 02 - 2008 ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதிய மற்றும் 1570/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 03 - 2016 நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய மற்றும் 1992/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 04 - 2017 யூன் மாதம் 02 ஆம் திகதிய மற்றும் 2021/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

1A - G 35639 — 15 (2021/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பகுதி II

2. சேவை கட்டமைப்பு :-

அமைச்சரவைப் பத்திர இலக்கம் : 21/1274/301/017 கொண்ட, "கணக்காய்வுத் திணைக்களத்தை வலுவூட்டுதல்" எனும் தலைப்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2021 யூலை மாதம் 8 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு வழங்கப்பட்ட 2021 செத்தெம்பர் மாதம் 13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, கணக்காய்வு பரீட்சகர் சேவையானது பின்வரும் பதவிப் பெயர்கள், பணியாற்றொகுதி மற்றும் சம்பள அளவுத்திட்டங்களைக் கொண்டமைந்துள்ளது.

I. சேவை வகுதிக்குரிய தகவல்கள் :-

| சேவை வகுதி | பதவிப் பெயர் | சம்பளக் குறியீடு | ஆரம்பச் சம்பளப் படிமுறை | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| வெளிக்கள/அலுவலக | கணக்காய்வு அலுவலர் | AS-01 | படிமுறை 1 | 1090 |
| முகாமைத்துவ உதவியாளர் விசேட வகுப்பு | உதவிக் கணக்காய்வு அத்தியட்சகர் | AS-02 | படிமுறை 6 | 360 |

II. சம்பள அளவுத்திட்டம் :- AS-02
- ரூ. 41,580-11 x 755-18 x 1,030-68,425

- AS-01
- ரூ. 36,585-10 x 660-11 x 755-15 x 930-65,440

EOG 12-0251